173

...துரை மேற்கு ஊராட்சி ஒன்றியம். குலமங்களம் ஊராட்சிமன்ற தலைவரின் நடவடிக்கைகள் முன்னிலை:

திருமதி. R.ராணி

ந.க.எண் 3432/2020/மதி.2 — நாள் 31.03.2021

பொருள் : ஒப்புதல் வழங்கி ஆணையிடுதல் - மனைப்பிரிவு - முறைப்படுத்துதல் மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம் - குலமங்களம் ஊராட்சி - வடுகபட்டி கிராமம் சர்வே எண் 33/1, 33/3A, 33/4A, 33/4B & 33/8-ல் 9600 ச.மீ பரப்பளவு இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான ஒப்புதல் வழங்கி ஆணையிடுதல்.

பார்வை

1. அரசாணை (நிலை) எண் 255 ஊரக வளர்ச்சி(C2)த் துறை நாள்-18.08.1997
2. அரசாணை (நிலை) எண் 71 ஊரக வளர்ச்சி (C2)த் துறை நாள்-16.06 2003
3. அரசாணை( நிலை) எண்: 79 விட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ரு.க.எண்.8449/ந.வ.4(3)/2020 -2த்துறை நாள்- 23.09.2020
4. அரசாணை எண். 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந:நி(1)துறை நாள்-04.02.2019
5. அரசாணை எண் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி(1)துறை நாள்-31.01.2020
6. உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர் (பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை அவர்களின் ந.க எண் 7978/2018-எல்ஏ2. நாள்-19.04.2012
7. திரு. R.வனிதா க/பெ R.ராமமூர்த்தி பிளாட் எண் 9, 1வது குறுக்குத்தெரு, விஸ்வநாதபுரம் மதுரை-14 என்பவரின் வளர்ச்சிக்கட்டணம் செலுத்திய கரூர் வைஸ்யா வங்கி, திருப்பாலை கிளை, வங்கி வரைவோலை எண். 412787 நாள், 29 03.2021

**ஆணைகள்:**

பார்வை 1ல் காணும் நடவடிக்கையில் மதுரை மாவட்டம், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், வடக்குத் தாலுகா குலமங்களம் ஊராட்சி வடுகபட்டி கிராமம் சர்வே எண் 33/1, 33/3A, 33/4A, 33/4B & 33/8 –ல் 2 ஏக்கர் 37 செண்ட் (அ) 9600 சமீ இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ம.உ.தி.கு எண் 60/2021 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதியும், உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971ன் பிரிவு 49ன் கீழ் மற்றும் பார்வை 6 மற்றும் 7.ல் காணும் அரசாணையின் விதி(4)ன் படியும் சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி திட்ட அனுமதி வழங்கி வரப்பெற்றுள்ளது.

பார்வை 7ல் காணும் மனுதாரர் குலமங்களம் ஊராட்சி வடுகபட்டி கிராமம் சர்வே எண் 33/1, 33/3A, 33/4A, 33/4B & 33/8 -ல் 9600 ச.மீ பரப்பளவில் உள்ள 67 (1 முதல் 67 முடிய) மனைகளுக்கு மனை ஒன்றிற்கு ரூ.500/-(ரூபாய் ஐநூறு மட்டும்) வீதம் ரூ.33500/- (ரூபாய் முப்பத்தி மூன்றாயிரத்தி ஐநூறு மட்டும்) வளர்ச்சிக் கட்டணம் குலமங்களம் ஊராட்சியில் செலுத்தியுள்ளார் மேலும் குலமங்களம் பொது உபயோகத்திற்கும், சாலைக்கும் மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மான கழகத்திற்கு (TANGEDCO) கீழ்கண்டுள்ளவாறு சார்பதிவாளர் அலங்காநல்லூர் அலுலகத்தில் பதிவு செய்து அதன் பத்திரம் நகல் வழங்கியுள்ளார்

| வ.எண் | இனாம் சாசனம் விபரம் | ஆவண எண்கள் | சதுர மீட்டர் |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மதுரை | 01-5939-2020 தேதி 16/12/2020 | 37.05 |
| 2 | ஊராட்சி மன்றத்தலைவர் குலமங்கலம் ஊராட்சி | 01-5938-2020 தேதி 16/12/2020 | 2656 77 |

எனவே, மதுரை மாவட்டம், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், வடக்குத் தாலுகா குலமங்களம் ஊராட்சி வடுகபட்டி கிராமம் சர்வே எண் 33/1, 33/3A, 33/4A, 33/4B & 33/8-ல் 2 ஏக்கர் 37 செண்ட் (அ) 9600 சமீ இடத்தில் அமையும் அனுமதியற்ற மனை எண்கள் 1 முதல் 67 வரை உள்ள மனைகளை சார்பதிவாளர் அலங்காநல்லூர் அலுவலகத்தில் 1ம் புத்தகம் 2019ஆம் ஆண்டு 3369 ஆவண எண்ணாக மொத்தம் 18 பக்கங்களில் 11.07.2019ம் நாளிலும் மற்றும் 1ம் புத்தகம் 2019ஆம் ஆண்டு 3368 ஆவண எண்ணாக மொத்தம் 18 பக்கங்களில் 11.07.2019ம் நாளிலும் திரு, R.வனிதா என்பவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள அனுமதியற்ற நிலத்தை கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. கொள்கை அளவிலான ஒப்புதல் அளிப்பதன் மூலம் நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. கொள்கை அளவில் ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு பெறப்பட்ட நில உரிமை ஆவணங்களின் அடிப்படையில் அரசாணையின் படி மனைப்பிரிவு வரைபடம் தயார் செய்து கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்க வழிவகை உள்ளதா என்று மட்டுமே பார்க்கப்படுகிறது சொத்தினை பரிமாற விரும்பும் எந்த நபரும் சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதி செய்துகொள்ள வேண்டும் அதன் மீது வேறு எவரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான நீதிமன்றத்தின் முன் தீர்க்கப்படலாம், நில உரிமை குறித்து முடிவு செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை பொருத்தமான அமைப்பு அல்ல

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால்

R.Vanitha

175

...ப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும் மேலும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ன்படி தங்களின் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

3. மனைப்பிரிவில் சாலைகள் அனைத்தும் கொள்கையிலான மனைப்பிரிவு வரன்முறை வரைபடத்தின்படி தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ன் படி பதிவுத்துறையில் செயல் அலுவலர் ஊராட்சி மன்றத் தலைவர் குலமங்களம் ஊராட்சி, மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகம் என உள்ளாட்சியின் அபிவிருத்திக்கு பதிவு செய்து வழங்கப்பட்டிருக்க வேண்டும்

4. அரசாணை (நிலை) எண் 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 13.10.2017ல் உள்ள விதி எண் 7(G)(ii)ன் படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள், அணுகு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (Open Space Reservation for Land) (OSR) இடங்கள் தொடர்புடைய உள்ளாட்சியின் பெயரில் மாற்றம் செய்யப்பட்டதில் நில அளவைகளில் மாற்றம் இருப்பின் உரிய அரசாணைகளின்படி தங்கள் மீது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் சட்ட திட்டங்களுக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

5. மனைப்பிரிவின் மனை அளவுகள், புல எண்கள் மற்றும் உத்தேச சாலை அமைப்புகள் ஆகியவற்றை செயல் அலுவலர் / ஊராட்சி மன்றத் தலைவர் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் உயர் அலுவலர்கள் அவர்களின் ஆய்வின் போது காட்டப்பட்டதில் மாற்றம் ஏதும் இருப்பின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ன் படி தங்கள் மீது உரிய சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்

6. இந்த மனைப்பிரிவு அமையும் நிலத்தின் மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எந்த துறையின் மூலமும் எடுக்கப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நிலம் கையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்பபடவில்லை எனவும், நிலமானது தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் மற்றும் நில சீர்திருத்தச்சட்டங்களின் கீழ் கவரப்படவில்லை என தங்களால் உறுதி மொழி சான்று வழங்கப்பட்டிருக்க வேண்டும்

7. கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மனையின் பரப்பளவு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது கூடுதல் பரப்பளவு இருப்பது பின்னர் தெரியவந்தால் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ன் படி தங்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்

8. இந்த மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் மூலம் மனைப்பிரிவில் அமையும் தனி மனைகளையும் வரன்முறைப்படுத்தப்பட்டதாக எடுத்துக்கொள்ளக்கூடாது

9. பெறப்பட்ட ஆவணங்களின்படி தயார் செய்யப்பட்ட வரைபடத்திற்கு உள்ளாட்சி விதிகளின் படி உரிய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும்

10. மனைகளில் அமைந்துள்ள கட்டிடங்கள் வரன்முறைப்படுத்தப்பட்டதாக கருதப்படக்கூடாது

11. வழங்கப்பட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டது கண்டறியப்பட்டால் திட்ட அனுமதி இரத்து செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையால் உரிய சட்டரீதியான நடவடிக்கை தங்கள் மீது எடுக்கப்படும்

12. மனையிடத்தினை சுற்றிலும் மரக்கன்றுகள் நடப்பட வேண்டும்

தலைவர்
குலமங்களம் ஊராட்சி
மதுரை மேற்கு ஒன்றியம்

இணைப்பு :

1.மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம்/ மதுரை உள்ளூர் திட்டக்குழுமப்பகுதி உதவி இயக்குநர்/ உறுப்பினர் செயலர் (பொ) அவர்களின் நடவடிக்கைகள்

2.அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் -1

3. மனைப்பிரிவு நிபந்தனைகள் -1

<u>பெறுநர்:</u>

திரு.R.வனிதா க/பெ திரு.R.ராமமூர்த்தி பிளாட் எண் 9, 1 வது குறுக்குதெரு, விஸ்வநாதபுரம், மதுரை-14

<u>நகல்:</u>

1. ஊராட்சி மன்ற தலைவர் / செயல் அலுவலர், குலமங்களம் ஊராட்சி
2. மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், மண்டலம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், மதுரை மேற்கு

நகல்:

1. ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், மதுரை
2. உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மாநகராட்சி அலுவலகம், அண்ணா மாளிகை, மதுரை- 625 002
3. சார்பதிவாளர், அலங்காநல்லூர் அலுவலகம், பதிவுத்துறை மதுரை,
4. உதவி இயக்குநர், நில அளவை மற்றும் ஆவணங்கள் துறை, மதுரை
5. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), ஊராட்சி ஒன்றிய அலுவலகம், மதுரை மேற்கு
6. இருப்பு கோப்பு

R. Vanitha

177

நகர் ஊரமைப்புத்துறை
மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை உள்ளூர் திட்டக்குழுமப்பகுதி,
உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர் (பொ) அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்- திரு.அ.விஜயன், பி.இ.,

ந.க.எண்.3432/2020/மதி2. நாள்-23.03.2021.

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - மதுரை உள்ளூர் திட்டக்குழுமப்பகுதி - மதுரை மாவட்டம் - மதுரை வடக்கு வட்டம் - மேற்கு ஊராட்சி ஒன்றியம் - குலமங்களம் ஊராட்சி மற்றும் வடுகப்பட்டி கிராமம் - சர்வே எண்கள்.33/1, 3A, 4A, 4B, 8 -ல் 9600.0ச.மீ பரப்பளவுள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி - வழங்குதல் - குறித்து.

பார்வை :

1) மனுதாரர் திருமதி.R.வனிதா மதுரை, விண்ணப்பம் பெறப்பட்ட நாள்.10.11.2020. (பதிவு எண்.20200701018866, நாள்.05.11.2020).
2) மனுதாரர் திருமதி.R.வனிதா மதுரை அவர்களின் விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் பெறப்பட்ட நாள்.10.11.2020, 04.12.2020, 18.01.2021, 09.02.2021, 19.02.2021 மற்றும் 19.03.2021.
3) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், மதுரை அவர்களின் சான்று கடிதம் ந.க.எண்.2341/2018/தி1, நாள்.01.10.2019.
4) அரசாணை எண்-18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-04.02.2019 மற்றும் அரசாணை எண்-16,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-31.01.2020.
5) மதுரை உள்ளூர் திட்டக்குழும தீர்மானம் எண்.130/2020, நாள்.29.09.2020.
6) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-4367/2017பிஏ-2, நாள்-06.11.2019 மற்றும் 05.02.2020.
7) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-13686/2017எல்ஏ-2, நாள்-08.09.2017.
8) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்-12201/2017சிபி, நாள்-28.09.2017.
9) உறுப்பினர் செயலர்(பொ), மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் கடித ந.க.எண்.3432/2020/மதி2, நாள்.03.12.2020, 04.12.2020, 12.01.2021, 04.02.2021 மற்றும் 12.03.2021.
10) சார்பதிவாளர், அலங்காநல்லூர் சார்பதிவகம், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண்.08/2021, நாள்.18.01.2021.
11) செயல் அதிகாரி /ஊராட்சி மன்றத் தலைவர், குலமங்களம் ஊராட்சி, மேற்கு ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம், பெறப்பட்ட நாள்.19.02.2021.
12) உத்தேச மனைப்பிரிவு சாலைகள் பூங்கா மற்றும் உள்ளாட்சி பொது உபயோகம் ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானபத்திர ஆவண எண்.5938/2020 நாள்-16.12.2020.
13) மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்களுக்கு TANGEDCO உபயோகம் ஒப்படைக்கப்பட்டது. ஆவண எண். 5939/2020 நாள்-16.12.2020.



R.Vanitha

179

14) மனுதாரர் திருமதி.R.வனிதா மதுரை, அவர்களின் கடிதம் மற்றும் கட்டணங்கள் செலுத்தப்பட்டு இணைப்புகள் பெறப்பட்ட நாள்.23.03.2021.

*****

<u>உத்தரவு</u>

மதுரை உள்ளூர் திட்டக்குழுமப்பகுதி, மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு வட்டம், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், குலமங்களம் ஊராட்சி மற்றும் வடுகப்பட்டி கிராமம், சர்வே எண்கள். 33/1, 3A, 4A, 4B, 8 -ல் 9600.0ச.மீ பரப்பளவுள்ள இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ம.உ.தி.கு. எண்.60/2021 என எண்ணிடப்பட்டு, தொழில்நுட்ப அனுமதியும், மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ன் பிரிவு 49-ன்கீழ் மற்றும் பார்வை(4)-ல் கண்ட அரசாணையின், விதி(4)-ன்படியும் திட்ட அனுமதி எண்.67/2021 என எண்ணிடப்பட்டு, கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி திட்ட அனுமதியும் வழங்கப்படுகிறது.

மேற்படி, உத்தேச மனைப்பிரிவிற்கு பார்வை(4)-ல் கண்டுள்ள அரசாணையின்படி, செயல் அதிகாரி/ஊராட்சி மன்றத் தலைவர், குலமங்களம் ஊராட்சி, மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம் அவர்களிடம் இருந்து மனுதாரர் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**<u>சிறப்பு நிபந்தனைகள் :-</u>**

1) நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது.

2) சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

3) பார்வை 7-ல் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் சுற்றறிக்கையின்படி, "உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட சாலைப்பகுதிகளை மனுதாரர் சொந்த செலவில் வருவாய் உட்பிரிவு செய்து, அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே, உள்ளாட்சியால் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்".

4) பார்வை 8-ல் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் சுற்றறிக்கையின்படி, "The Tamil Nadu Government in G.O. Ms. No: 112, Housing and Urban Development Department, Dated: 22.06.2017 have approved the Tamilnadu Real Estate ( Regulation & Development) Act 2016. The promoter has to advertise, Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be in any Real Estate project or part of it only after registering the real estate Project with the Real Estate Regulatory Authority".

R.Vanitha

.3..

181

5) தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள்-2019, விதி எண்.47(11)-ன்படி, மனைப்பிரிவில் தேவைப்படும் சாலை, குடிநீர் வசதி, வடிகால் வசதி, கழிவுநீர் வசதி மற்றும் மின்சார வசதிகளை ஏற்படுத்துதல்/ மேம்படுத்தலுக்காக உள்ளாட்சி மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் மதிப்பீடு செய்யப்படும் செலவுத்தொகையினை மனுதாரரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

6) நில உரிமை குறித்து உள்ளாட்சியால் வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலினைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என்று அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.

மேற்படி சிறப்பு நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது.

உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை மாவட்டம்.

22/07/2024.
23/07/24

இணைப்பு

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடங்கள் - 2
மனைப்பிரிவு நிபந்தனைகள் - 2

பெறுநர்

செயல் அதிகாரி/ஊராட்சி மன்றத் தலைவர்,
குலமங்களம் ஊராட்சி மன்றம்,
மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம்,
மதுரை மாவட்டம்.

நகல்

1) திருமதி.R.வனிதா, (உள்ளாட்சி மூலமாக)
மனை எண்.09,
முதல் குறுக்குத் தெரு,
விஸ்வநாதபுரம், மதுரை -14.

2) தமிழ்நாடு கட்டிட, மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம், (TNRERA)
1A, முதல் தளம், காந்தி இர்வின் பிரிட்ஜ் சாலை,
எழும்பூர்,
சென்னை -600008.

தொழில்நுட்ப வைப்பறைக்கு -1 நகல்.

R. Vanitha